சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்)
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

**ஆணை நாள் 06.07.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இ.கா.ப. (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

•••••

**வழக்கு எண். CP 4288/E/2024**

திரு.ஏ.முத்தரசு -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம், பொது அதிகார அமைப்பு
மாம்பலம் வட்டம், சென்னை.

******

## ஆணை

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (06.07.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மேல்முறையீட்டாளர் | திரு.ஏ.முத்தரசு அவர்கள் இன்றைய விசாரணையில் ஆஜரானார். |
| பொது அதிகார அமைப்பின் சார்பாக | திருமதி.பா.ரஞ்சனி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், மாம்பலம், சென்னை அவர்கள் ஆஜரானார். |
| சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் மனு நாள் | 30.05.2024 |
| **கோரிய தகவல்**, சென்னை 600083, அசோக்நகர், 10வது நிழைச்சாலையில் உள்ள அறிஞர் அண்ணா சிலைக்கு பின்புறம் உள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு சொந்தமான இடத்தின் புல எண் மற்றும் அதன் பரப்பளவு எவ்வளவு சதுர அடி உள்ளிட்ட 6 இனங்களில் தகவல்களை வழங்கக் கோரி, பொதுத் தகவல் அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், மாம்பலம் அவர்களுக்கு மனு செய்துள்ளார். மனுவானது சட்டப் பிரிவு 6(3)-ன்கீழ் பொதுத தகவல் அலுவலர்/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர், மாம்பலம் அவர்களின் 14.06.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக | |

| | |
|---|---|
| பொதுத் தகவல் அலுவலர்/ சார் ஆய்வாளர், மாம்பலம் வட்டம், சென்னை அவர்களுக்கு மாற்றப்பட்டுள்ளது. | |
| பொதுத் தகவல் அலுவலர் பதில் கடிதம் | ந.க.எண்.ஆ1/3098-L-8/2025, நாள் 10.11.2025 |
| சட்டப் பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனு நாள் | --- |
| மேல்முறையீட்டு அலுவலர் பதில் கடிதம் | ---- |
| சட்டப்பிரிவு 18(1)-ன்கீழ் புகார் மனு நாள் | 18.09.2024 |

•••••

- பொதுத் தகவல் அலுவலர், இவ்வழக்கில் மனுதாரர் கோரிய தகவல் தங்கள் அலுவலக கடித ந.க.எண்.ஆ2/4288/2024, நாள் 10.11.2025 தேதியிட்ட கடிதம் வாயிலாக மனுதாரருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதாக எடுத்துரைக்கிறார்.
- மனுதாரர், வழங்கப்பட்ட தகவல் முழுமையான தகவல் அல்ல எனவும், உரிய தகவல்களை வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடுமாறும் ஆணையத்தைக் கோரினார்.

2. மனுதாரர் மற்றும் பொதுத் தகவல் அலுவலரின் வாதம் மற்றும் ஆவணங்களை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு கீழ்கண்டவாறு உத்தரவிடப்படுகிறது:-

a) இவ்வழக்கில் மனுதாரர் 30.05.2024 தேதியிட்டு சட்டப் பிரிவு 6(1)-ன்கீழ் கோரிய தகவல்களுக்கு, பொதுத் தகவல் அலுவலர் 10.11.2025 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி தகவல் முழுமையான தகவல் அல்ல என மனுதாரர் எடுத்துரைத்த வாதத்தினை ஆணையம் பதிவு செய்கிறது.

b) எனவே, பொதுத் தகவல் அலுவலர் இவ்வாணை கிடைக்கப்பெற்றவுடன், இவ்வழக்கில் மனுதாரர் கோரியுள்ள 6 இனங்களுக்கான உரிய தகவல்களை, சட்டப் பிரிவு 7(6)-ன்படி கட்டணம் ஏதுமின்றி அலுவலக முத்திரையுடன் கூடிய சான்றொப்பத்துடன், ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் மனுதாரருக்கு வழங்கி, மனுதாரர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்ததற்கான ஒப்புகை அட்டையின் நகல் அல்லது அஞ்சல் துறையின் இணையதள அறிக்கையின் நகல் (Online Tracking Consignment) மற்றும் வழங்கப்பட்ட தகவல் குறித்த அறிக்கையின் நகலினை **இவ்வாணையத்தில் 04.08.2025 அன்று நேரில் சமர்ப்பிக்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.**

c) <u>மேலும் முதல் மேல்முறையீட்டு அலுவலர்/ வட்டாட்சியர், மாம்பலம் அவர்களுக்கு கீழ்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது</u>:-

i. மனுதாரரின் 30.05.2024 தேதியிட்ட மனுவினை சட்டப் பிரிவு 6(3)-ன்கீழ் பெற்றுக்கொண்டு, மனு பெறப்பட்ட 30 தினங்களுக்குள் தகவல் வழங்கத் தவறிய அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் யார் என கண்டறிந்து அவர் மீதும் சட்டப் பிரிவு 20(1)-ன்கீழ் பணத்தண்டமும், 20(2)-ன்கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் ஏன் பரிந்துரைக்கக் கூடாது என்பதற்கான எழுத்துப்பூர்வமான விளக்கத்தினையும் பெற்று, அதனை ஓர் அறிக்கையாக தயார் செய்து அவ்வறிக்கையினை இன்று ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக **இவ்வாணையத்தில் 04.08.2026 அன்று நேரில் சமர்ப்பிக்க உத்தரவிடப்படுகிறது.**

ii. மேற்படி உத்தரவினை முழுமையான நிறைவேற்றி அதுகுறித்த அறிக்கையினை குறிப்பிட்ட தேதியில் இவ்வாணையத்தில் சமர்ப்பிக்க தவறும் பட்சத்தில், விளக்கம் அளிக்க ஏதும் இல்லை என ஆணையத்தால் கருதப்பட்டு சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என எச்சரிக்கப்படுகிறது.

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். CP 4288/E/2024**

**பெறுநர்**

முதல் மேல்முறையீட்டு அலுவலர்/ வட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம்,
மாம்பலம் வட்டம், சென்னை.

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
மாம்பலம் வட்டம், சென்னை.

**மேல்முறையீட்டாளர்**

திரு.ஏ.முத்தரசு, த/பெ.S.ஏழுமலை,
எண்.60, முதல் தளம்,
10-வது நிழற்காலை, அசோக் நகர்,
சென்னை - 600 083.

Copy to: File MP/PA-